**அசல் வழக்கு எண்.161/2020**

**இந்நீதிமன்ற எழுத்தர் திரு J. மோகன்** Grade –III Bench Clerk **என்பவரால் முறையோடு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் 1 ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875 ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டு 2022ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.**

| | |
|---|---|
| **பெயர். செல்வராசன் (PW1)**<br>**வயது.** | **நாள்.08/09/2022** |
| **த/பெ. பாலகிருஷ்ணன்** | **தொழில்** |
| **கிராமம்** | **வட்டம்,** |

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்.**

இந்த வழக்கில் நான் வாதி. என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலம் நான் சொல்லி தான் தயாரிக்கப்பட்டது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள விவரங்கள் உண்மையானது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. 14/12/1988 தேதியிட்ட என் தகப்பனார் பாலகிருஷ்ண முதலியார் மன்னபெருமாள் முதலியாரிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய ஆவணம் அசல் நான் தாக்கல் செய்கிறேன் ( **அந்த கிரைய ஆவணம் அசல் வா.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.)**

2. 19/08/1989 தேதியிட்ட பிரதிவாதி பெயரில் பதிவான கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் நான் தாக்கல் செய்கிறேன் ( **அந்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**3.** 02/12/2003 தேதியிட்ட என் தகப்பனார் மற்றும் மன்னபெருமாள் பெயரில் பதிவாகியுள்ள கணினி பட்டா அசல் நான் தாக்கல் செய்கிறேன். ( அந்த கணினி பட்டா அசல் **வா.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது),**

**4.** 04/12/2003 தேதியிட்ட என் தகப்பனார் பாலகிருஷ்ண முதலியார் பெயரில் பதிவாகியுள்ள பட்டா அசல் நான் தாக்கல் செய்கிறேன். (அந்த பட்டா அசல் **வா.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகின்றது).**

**5. 03/03/2008** தேதியிட்ட வில்லங்கசான்று நான் தாக்கல் செய்கிறேன் (அந்த வில்லங்கசான்று அசல் **வா.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

6. 10/04/2008 தேதியிட்ட என் பெயலில் பதிவாகியுள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் நான் தாக்கல் செய்கிறேன் **(அந்த செட்டிமெட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

7. 21/01/2009 தேதியிட்ட என் பெயரில் உள்ள வரி இரசீது நான் தாக்கல் செய்கிறேன் **(அந்த வரி இரசீது வா.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

8. 07/04/2010 தேதியிட்ட என் பெயரில் உள்ள வரி இரசீது நான் தாக்கல் செய்கிறேன் **(அந்த வரி இரசீது வா.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

9. 02/03/2016 தேதியிட்ட என் பெயரில் பதிவாகியுள்ள அடங்கல் பதிவேடு சான்றிட்ட நகல் **(அந்த அடங்கல் பதிவேடு சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் அந்த ஆவணத்தில் கிராம நிர்வாக அலுவலர் கையொப்பம் செய்துள்ளதால் பிரதிவாதியின் தரப்பி வழக்கறிஞரின் ஆட்சேபனையோடு குறியீடு செய்யபடுகிறது).**

**(வாதி தரப்பில் மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வழக்கு ஒத்திவைப்பப்படுகிறது)**

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-N.Preethi
DM Cum JM
Cheyyur